<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT, CHENNAI-600 104

SC. No. 08/2019

Deposition of witness for Prosecution / Defence / Court

PW -3

Name : பிரீத்தா

Address :

Age : 22

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of April, 2022.

<u>Dated: 06.04.2022</u>

<u>முதல் விசாரணை</u>

என் பெயர் பிரீத்தா, அப்பா பெயர். திலிப், எண்.57, E கக்கன்ஜி நகர், ஐ.சி.எப். சென்னை -38 என்ற விலாசத்தில் நான் வசித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அப்பா, அ.சா.2 என்னுடைய அம்மா. எனக்கு ஒரே அண்ணன் பிரகாஷ் ராஜ். நான் ICWAIயில் சி.எம்.ஏ படிக்கிறேன். என்னுடைய தாயார் சமையல் வேலை செய்கிறார். என்னுடைய அப்பா வருமான வரி அலுவலகத்தில் ஹவுஸ்கீப்பிங் வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எங்கள் பகுதியை சேர்ந்தவர், அவர் பெயர் சூர்யா. 1.1.2018 அன்று காலை சுமார் 7 மணியளவில் ஆஜர் எதிரி டாய்லெட் போகலாம் என்று என் அண்ணன் பிரகாஷ்ராஜை அழைத்தார். அவ்வாறு அழைத்து சென்ற சிறிது நேரத்தில் என் பெற்றோர் வேலைக்கு சென்றுவிட்டனர், நான் மட்டும் வீட்டிலிருந்தேன். காலை சுமார் 8.30 மணியளவில் எங்கள் பகுதியை சேர்ந்த லோகேஷ், குணா எங்கள் வீட்டிற்கு ஓடி வந்தார்கள். அவர்கள் பொது கழிப்பிடத்திற்கு பின்புறம் ஆஜர் எதிரி என் அண்ணனை கத்தியால் குத்தி விட்டு ஓடிவிட்டதாக தெரிவித்தனர். அவர்கள் சொன்னவுடன் மேற்சொன்ன விவரத்தினை என் தாயாருக்கு போன் செய்து கூறினேன். பிறகு சிறிது நேரத்தில்என் தாயார் வேலையிலிருந்து வீட்டிற்கு வந்துவிட்டார். நானும் என் தாயாரும் நியூ ஆவடி ரோடில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பின்புறம் கால்வாய் ஓரத்தில் உள்ள சம்பவ இடத்திற்கு சென்றுபார்த்தபோது என் அண்ணன்

கழுத்து, முதுகு, நெஞ்சு மற்றும் பல பகுதிகளிலும் குத்துப்பட்டு ரத்த வெள்ளத்தில் சேற்றில் கிடந்தார். சிறிது நேரத்தில் என் அப்பா சம்பவ இடத்திற்கே வந்தார். அப்புறம் என் அப்பா இது சம்பந்தமாக புகார் கொடுத்தார். அப்பொழுது நான் என் அம்மா உடனிருந்தேன். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt:06.04.2022

IV Addl. Sessions Judge.
FAC. III Addl. Court.